ஆண்டவராகிய
இயேசுகிறிஸ்துவைக் குறித்து
மேலும் அறிய விரும்பினால்
எங்களோடு தொடர்பு
கொள்ளுங்கள்

எங்கள் முகவரி :
CHRISTIAN TRUTH BOOKS
VELLIA, 679 324.
KERALA.



ஆதியிலே வார்த்தை இருந்தது.
அந்த வார்த்தை
தேவனிடத்திலிருந்தது. அந்த
வார்த்தை தேவனாயிருந்தது.

யோவான் 1:1. அவருக்குள்
ஜீவன் இருந்தது. அந்த ஜீவன்
மனுஷருக்கு ஒளியாயிருந்தது.

யோவான் 1:4

இயேசு ஜனங்களை நோக்கி,
"நான் உலகத்திற்கு
ஒளியாயிருக்கிறேன். என்னைப்
பின் பற்றுகிறவன் இருளிலே
நடவாமல், ஜீவ ஒளியை
அடைந்திருப்பான்" என்றார்.
யோவான் 8 : 12
இயேசு, "நானே வழியும்,
சத்தியமும்
ஜீவனுமாயிருக்கிறேன்,
என்னாலேயல்லாமல் ஒருவனும்
பிதாவினிடத்தில் வரான்"
என்றார்
யோவான் 14 : 6



வேதாகமத்தை வாசியுங்கள். அது
தேவனுடைய வார்த்தை.
தேவசப்தத்திற்குச் செவி
கொடுங்கள். உன்னதமான,
ஜீவனுள்ள, தேவன் உங்களைக்
குறித்து அக்கறை உள்ளவரா
யிருக்கிறார். இன்றே நீங்கள்
அவரது அன்பை விளங்கிக்
கொள்ள வேண்டுமென்று
விரும்புகிறார். ஒருக்காலும்
ஒழிந்து போகாத அவரது
வார்த்தைகள் உங்களுக்கு
மெய்யான சந்தோஷத்திற்கும்
சமாதானத்திற்குமுள்ள வழியைக்
காட்டுகின்றன. மேலும் அறிய
விரும்பினால் எங்களோடு
தொடர்பு கொள்ளுங்கள்.

இதோ, சீக்கிரமாய் வருகிறேன்.
தாகமாயிருக்கிறவன் வரக்
கடவன். விருப்பமுள்ளவன்
ஜீவத்தண்ணீரை இலவசமாய்
வாங்கிக் கொள்ளக் கடவன்.
ஆமென், கர்த்தராகிய
இயேசுவே வாரும்.
வெளிப்படுத்தின விசேஷம்
22 : 12,17,20



இயேசு நின்று, சத்தமிட்டு,
"ஒருவன் தாகமாயிருந்தால்
என்னிடத்தில் வந்து, பானம்
பண்ணக் கடவன்.
வேதவாக்கியம் சொல்லுகிறபடி
என்னிடத்தில்
விசுவாசமாயிருக்கிறவன்
எவனோ, அவன்
உள்ளத்திலிருந்து ஜீவத்
தண்ணீருள்ள நதிகள் ஓடும்"
என்றார்.
யோவான் 7 : 37-38

நம்முடைய மீறுதல்களினிமித்தம்
அவர் காயப்பட்டு, நம்முடைய
அக்கிரமங்களினிமித்தம் அவர்
நொறுக்கப்பட்டார், நமக்குச்
சமாதானத்தை உண்டு பண்ணும்
ஆக்கினை அவர் மேல் வந்தது.
அவருடைய தழும்புகளால்
குணமாகிறோம்.
ஏசாயா 53 : 5



பின்பு நான் புதிய
வானத்தையும், புதிய பூமியையும்
கண்டேன்; முந்தின வானமும்,
முந்தின பூமியும் ஒழிந்து
போயின. கண்ணீர் யாவையும்
தேவன் துடைப்பார். இனி
மரணமுமில்லை,
அலறுதலுமில்லை,
வருத்தமில்லை. முந்தினவைகள்
ஒழிந்து போயின.
வெளிப்படுத்தின விசேஷம்
21 : 1, 4

கர்த்தர்தாமே ஆரவாரத்தோடும்,
பிரதான தூதனுடைய சத்தத்
தோடும், தேவ எக்காளத்தோடும்
வானத்திலிருந்து இறங்கி
வருவார். அப்பொழுது கிறிஸ்து
வுக்குள் மரித்தவர்கள் முதலாவது
எழுந்திருப்பார்கள். பின்பு
உயிரோடிருக்கும் நாமும்
கர்த்தருக்கு எதிர் கொண்டு
போக, மேகங்கள் மேல் அவர்
களோடே கூட ஆகாயத்தில்
எடுத்துக் கொள்ளப் பட்டு
இவ்விதமாய் எப்பொழுதும்
கர்த்தருடனே கூட இருப்போம்.
1 தெசலோனிக்கேயர் 4 : 16-17



விசுவாசத்தினாலே கிறிஸ்து
உங்கள் இருதயங்களில்
வாசமாயிருக்கவும் . . . இதோ
வாசற்படியிலே நின்று
தட்டுகிறேன். ஒருவன் என்
சத்தத்தைக் கேட்டு, கதவைத்
திறந்தால், அவனிடத்தில் நான்
பிரவேசித்து, அவனோடே
போஜனம் பண்ணுவேன் ;
அவனும் என்னோடே
போஜனம் பண்ணுவான்.
எபேசியர் 3 : 17
வெளிப்படுத்தின விசேஷம்
3 : 20

என் வசனத்தைக் கேட்டு,
என்னை அனுப்பினவரை
விசுவாசிக்கிறவனுக்கு நித்திய
ஜீவன் உண்டு. அவன்
ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல்,
மரணத்தை விட்டு நீங்கி,
ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்
என்று மெய்யாகவே
உங்களுக்குச் சொல்லுகிறேன்.
யோவான் 5 : 24



என்னைக் குறித்தும், என்
வார்த்தைகளைக் குறித்தும் எவன்
வெட்கப்படுகிறானோ,
அவனைக் குறித்து மனுஷ
குமாரனும் தம்முடைய
மகிமையோடும், பிதாவின்
மகிமையோடும், பரிசுத்த
தூதர்களின் மகிமையோடும்
வரும் போது வெட்கப்படுவார்.
லூக்கா 9 : 26

ஆவிக்கேற்றபடி நடந்து
கொள்ளுங்கள், அப்பொழுது
மாம்ச இச்சையை
நிறைவேற்றாதிருப்பீர்கள்
கலாத்தியர் 5 : 16
பரிசுத்த ஆவியைத்
துக்கப்படுத்தாதிருங்கள்
எபேசியர் 4 : 30



தேவன் தம்முடைய ஒரே
பேறான குமாரனை
விசுவாசிக்கிறவன் எவனோ,
அவன் கெட்டுப் போகாமல்,
நித்திய ஜீவனை
அடையும்படிக்கு, அவரைத்
தந்தருளி, இவ்வளவாய்
உலகத்தில் அன்பு கூர்ந்தார்
யோவான் 3 : 16

வருத்தப்பட்டு

பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது.

மத்தேயு 11 : 28, 30



நீங்கள் ஜெபம் பண்ணும் போது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்

மாற்கு 11 : 24

புல் உலர்ந்து பூ உதிரும். நமது
தேவனுடைய வசனமோ
என்றென்றைக்கும் நிற்கும்

ஏசாயா 40 : 8

வானமும், பூமியும் ஒழிந்துபோம்,
என் வார்த்தைகளோ ஒழிந்து
போவதில்லை

லூக்கா 21 : 33



பாவத்தின் சம்பளம் மரணம்;
தேவனுடைய கிருபை வரமோ
நம்முடைய கர்த்தராகிய இயேசு
கிறிஸ்துவினால் உண்டான
நித்திய ஜீவன்.

ரோமர் 6 : 23

தேவனே! பாவியாகிய
என்மேல் கிருபையாயிரும்.

லூக்கா 18 : 13

ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின் படி நடவாமல், ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை.

ரோமர் 8 : 1

இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும் படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும் படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.

யோவான் 20 : 31



ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்.

யோவான் 14 : 2-3

ஆம்! அநாதி சிநேகத்தால்
உன்னைச் சிநேகித்தேன்,
ஆதலால் காருணியத்தால்
உன்னை இழுத்துக்
கொள்ளுகிறேன்.

எரேமியா 31 : 3

நீ பயப்படாதே, நான்
உன்னுடனே இருக்கிறேன்.

ஏசாயா 41 : 10



உங்கள் நாமங்கள் பரலோகத்தில்
எழுதியிருக்கிறதற்காகச்
சந்தோஷப்படுங்கள்.

லூக்கா 10 : 20

நாம் விசுவாசத்தினாலே
நீதிமான்களாக்கப்
பட்டிருக்கிறபடியால், நம்முடைய
கர்த்தராகிய இயேசு கிறிஸ்து
மூலமாய் தேவனிடத்தில்
சமாதானம் பெற்றிருக்கிறோம்.

ரோமர் 5 : 1

எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது
வாருங்கள்!
லூக்கா 14:17
இரட்சிக்கப் படுவதற்கு நான்
என்ன செய்ய வேண்டும்?
"கர்த்தராகிய இயேசு
கிறிஸ்துவை விசுவாசி,
அப்பொழுது நீயும் உன்
வீட்டாரும்
இரட்சிக்கப்படுவீர்கள்."
அப்போஸ்தலர் 16 : 30-31



அவர் ஒளியிலிருக்கிறது போல
நாமும் ஒளியிலே நடந்தால்,
ஒருவரோடொருவர்
ஐக்கியப்பட்டிருப்போம்;
அவருடைய குமாரனாகிய
இயேசு கிறிஸ்துவின் இரத்தம்
சகல பாவங்களையும் நீக்கி
நம்மைச் சுத்திகரிக்கும்.
1 யோவான் 1 : 7

கிருபையினாலே விசுவாசத்தைக்
கொண்டு இரட்சிக்கப்
பட்டீர்கள்; இது உங்களால்
உண்டானதல்ல, இது
தேவனுடைய ஈவு ஒருவரும்
பெருமை பாராட்டாத படிக்கு
இது கிரியைகளினால்
உண்டானதல்ல.

எபேசியர் 2 : 8-9

தேவன் அருளிய சொல்லி
முடியாத ஈவுக்காக அவருக்கு
ஸ்தோத்திரம்.

2 கொரிந்தியர் 9 : 15



அவரை (கர்த்தராகிய இயேசு
கிறிஸ்துவை) விசுவாசிக்கிறவன்
எவனோ அவன் அவருடைய
நாமத்தினாலே
பாவமன்னிப்பைப் பெறுவான்.

அப்போஸ்தலர் 10 : 43

அவர் நம்முடைய
பாவங்களுக்காக
ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம்
நீதிமான்களாக்கப்படுவதற்காக
எழுப்பப்பட்டும் இருக்கிறார்.

ரோமர் 4 : 25

அவருடைய நாமத்தின் மேல்
விசுவாசமுள்ளவர்களாய்,
அவரை ஏற்றுக் கொண்டவர்கள்
எத்தனை பேர்களோ, அத்தனை
பேர்களும் தேவனுடைய
பிள்ளைகளாகும்படி
அவர்களுக்கு
அதிகாரங்கொடுத்தார்.

யோவான் 1 : 12

உங்கள் பாவங்கள் நிவிர்த்தி
செய்யப்படும் பொருட்டு, நீங்கள்
மனந்திரும்பிக் குணப்படுங்கள்.

அப்போஸ்தலர் 3 : 20



கிறிஸ்துவும் உங்களுக்காகப்
பாடுபட்டு, நீங்கள் தம்முடைய
அடிச்சுவடுகளைத் தொடர்ந்து
வரும்படி, உங்களுக்கு
மாதிரியைப் பின்வைத்துப்
போனார்.

1 பேதுரு 2 : 21

விசுவாசத்தின் நல்ல
போராட்டத்தைப் போராடு.

1. தீமோத்தேயு 6 : 12

என் ஆடுகள் என் சத்தத்திற்குச்
செவிகொடுக்கிறது. நான்
அவைகளை அறிந்திருக்கிறேன்.
அவைகள் எனக்குப் பின்
செல்லுகிறது. நான்
அவைகளுக்கு நித்திய ஜீவனைக்
கொடுக்கிறேன். அவைகள் ஒருக்
காலும் கெட்டுப் போவதில்லை.
ஒருவனும் அவைகளை என்
கையிலிருந்து பறித்துக்
கொள்வதுமில்லை.
யோவான் 10 : 27-28



என்னிடத்தில் வருகிறவனை
நான் புறம்பே தள்ளுவதில்லை
யோவான் 6 : 37
இழந்து போனதைத் தேடவும்,
இரட்சிக்கவுமே மனுஷகுமாரன்
வந்திருக்கிறார்.
லூக்கா 19 : 10

பிதாவின் மகிமையினாலே,
கிறிஸ்து மரித்தோரிலிருந்து
எழுப்பப்பட்டது போல, நாமும்
புதிதான ஜீவனுள்ளவர்களாய்
நடந்துகொள்ளும்படிக்கு,
அவருடைய
மரணத்துக்குள்ளாக்கும்
ஞானஸ்நானத்தினாலே
கிறிஸ்துவுடனே கூட அடக்கம்
பண்ணப்பட்டோம்.
ரோமர் 6 : 4



இதோ, உலகத்தின் முடிவு
பரியந்தம் சகல நாட்களிலும்
நான் உங்களுடனே கூட
இருக்கிறேன்.
மத்தேயு 28 : 20
மனுஷர் உங்கள்
நற்கிரியைகளைக் கண்டு,
பரலோகத்திலிருக்கிற உங்கள்
பிதாவை மகிமைப்படுத்தும்படி,
உங்கள் வெளிச்சம் அவர்கள்
முன் பிரகாசிக்கக் கடவது.
மத்தேயு 5 : 16